**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S.No.221/2016**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | பி.வா.சா.2 |
| Name | : | கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |
| Occupation | : | |
| Date | : | 16.02.2026 |

**முதல் விசாரணை :**

எனக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் குருசாமி. எனது தந்தை இறந்து 17 வருடங்கள் ஆகிறது 2008 ல் இறந்தார். எனது அப்பா இறக்கும்போது பத்திர எழுத்தராக பணியாற்றி வந்தார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதியவர் எனது தந்தை குருசாமி. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் Written by என எழுதியிருப்பது எனது தந்தை குருசாமி.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை. தற்போது எனக்கு என்ன வயதாகிறது என்றால் 45. எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை வாங்கி படித்துப் பார்த்தேனா என்றால் ஆமாம். அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்றால் என் அப்பா எழுதிய உயில் பற்றி சாட்சிக்கு அழைத்திருந்தார்கள். நான் இந்நீதிமன்றத்திற்கு வந்து என் அப்பா எந்த உயில் ஆவணம் எழுதினார் என ஆவணத்தை பார்க்கவேண்டும் என மனு தாக்கல் செய்து ஆவணத்தைப் பார்வையிட்டேனா என்றால் இல்லை. என் அப்பா பத்திர எழுத்தர் என்பதற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட அடையாள சான்று உரிமம் ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா குருசாமி எப்போது இறந்தார் என்றால் 2008 ல்.

என் அப்பா இறந்ததற்கான இறப்புச் சான்றை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்திலிருந்து என் அப்பாவுக்கு அழைப்பாணை வந்தபோது என் அப்பாவின் இறப்புச் சான்றிதழ் ஒளி நகலை நீதிமன்ற அலுவலரிடம் கொடுத்தேன். இறந்துபோன குருசாமிக்கு நான் தான் வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.2 உயில் ஆவணத்தை தற்போது தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.2 உயில் ஆவணம் எந்த ஆண்டு எழுதப்பட்டது என எனக்குத் தெரியாது என்றால் சரிதான். என் அப்பா ஆங்கிலத்தில் கையொப்பம் போடுவாரா, தமிழில் கையொப்பம் போடுவாரா என்றால் ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவார், தமிழிலும் கையெழுத்து போடுவார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய தந்தையினுடையது என்பதை நிரூபிக்க வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்திலிருந்து அனுமதி கொடுத்தால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் தற்போது எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. நான் குருசாமியின் மகன் கிடையாது மகனாக இருந்திருந்தால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என் அப்பா ஆவண எழுத்தர் கிடையாது, நான் கையூட்டு பெற்றுக்கொண்டு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள பத்திரத்தை எழுதிய நபர் எனது தகப்பனார் கிடையாது அவர் வேறு ஒரு நபர் என்றால் சரியல்ல எனது தந்தை தான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.2 உயில் ஆவணத்தில் பத்திரம் தயார் செய்ததாக கூறப்பட்ட நபர் எனது தகப்பனார் கிடையாது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.16 17:37:07 +0530